## வாட்ஸ்சாப்பில் மாநகர் மன்ற அமலாக்க உறுப்பினரை

# மிரட்டிய ஆடவன் கைது!



**நமது நிருபர்**

கோலாலம்பூர், ஏப்.10-

வாட்சாப் வாயிலாக கோலாலம்பூர் மாநகர் மன்ற உறுப்பினரை ஆத்திரமூட்டும் வகையில் மிரட்டியதாகச் சந்தேகிக்கப்பட்ட ஓர் ஆடவனை போலீசார் கைது செய்தனர். சம்பந்தப்பட்ட 57 வயதுடைய அந்த ஆடவனைக் கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12.10 மணிக்கு செராஸ் மாவட்ட குற்றப் புலனாய்வுத் துறை போலீஸார் கைது செய்ததாக கோலாலம்பூர் போலீஸ் தலைவர் டத்தோ ருஸ்டி முகமட் இசா தெரிவித்தார்.

இந்த கைது நடவடிக்கை முகநூல் வாயிலாக கோலாலம்பூர் மாநகர் மன்ற அமலாக்க அதிகாரிக்கு ஆத்திரமூட்டும் வகையில் தகவல் அனுப்பியதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது. அந்த வாட்சாப்பில் சட்டத்தை அமல்படுத்தும் பொதுச்சேவை ஊழியரான கோலாலம்பூர் மாநகர் மன்ற அதிகாரியை மிரட்டும் வகையில் சித்திரிக்கப்பட்டிருந்ததாக ஓர் அறிக்கையில் டத்தோ ருஸ்டி முகமட் இசா குறிப்பிட்டார்.